1986 மே 3]

வுடனேயே இந்த இல்லுமெனைட்டை எடுத்து ப்யூர் செய்வதற்கு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ஆகையால் நான் கேட்டுக் கொள்வது, மாநில அரசு டைட்டேனியம் தயார் செய்கின்ற ஒரு தொழிற்சாலையை அமைத்து, அதன்மூலம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது போல், இன்றைக்கு பல பொருள்கள் தேவைப்படுகின்றன. ஆகவே தான் ரேர் எர்த் நிறுவனம் கூட, மத்தியப் பேரரசைச் சார்ந்த நிறுவனம் கூட, அதை எடுத்து வெளிநாட்டிற்கு அனுப்புகிறது. இங்கே இதையெல்லாம் செய்ய வேண்டுமென்று சொன்னால், அது லாபகரமாக இருக்குமா என்பதை தமிழ்நாடு தொழில் முதலீட்டு வளர்ச்சிக் கழகம் ஆராய்ந்துகொண்டிருக்கிறது. இது லாபகரமாக இருக்கும் என்று தெரிந்தால், அந்தத் தொழிற்சாலையை அமைப்பது பற்றி, இந்தத் தொழில் வளர்ச்சிக் கழகம் ஆலோசிக்கும்.

தென்காசியை தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவித்தல்

614 — (*வினா எண். 7737) **திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்காசி தாலுகாவை தொழிற்துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காக்களாக அறிவிப்பதற்காக பாண்டே கமிட்டி அமைக்கப்பட்டு அந்த பாண்டே கமிட்டியின் தீர்வின்படி திருநெல்வேலி மாவட்டத்தில் 6 தாலூக்காக்களை அவர்கள் ஆராய்ந்து அதிலே தென்காசி தாலூகாதான் தொழில் துறையில் பின்தங்கிய தாலூகாவாக அறிவிக்கப்பட இலாயக்கானது, ஏனென்றால் அங்கு பலதும் இருக்கின்றன என்று அவர்கள் அறிக்கையில் வெளியிட்டிருக்

கிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களும் 'ஆம்' என்று பதில் சொல்லி இருக்கிறார்கள் என் கேள்விக்கு. நான் கேட்க விரும்புவது, அது எந்த அளவில் இருக்கிறது? இன்னும் எவ்வளவு நாட்களுக்குள் தென்காசி தாலுகா தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசைப் பொறுத்தவரையில் அதை ஏற்றுக்கொண்டு பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்கிற ஏற்பாட்டில் இறங்கியிருக்கிறது. ஆகவே, தென்காசி தாலுகாவை மத்திய அரசின் 'பி' பிரிவின்கீழ் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும்படி கோரி இந்த அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி இருக்கிறது. மத்திய அரசின் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த அந்தத் தகவலுக்கு நன்றி. இருந்தாலும் கூட மத்திய அரசு தென் காசியைத் தொழில்துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிப்பதற்கு முன்னால் மாநில அரசே கூட முன்வந்து அதை தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்கலாம். ஆகவே, மத்திய அரசும் அதை அறிவிக்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே நாம் முதலிலேயே, முன்மாதிரியாக, தமிழ்நாடு அரசே தென்காசி தாலுகாவை தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிக்க முன்வருமா? அதைத் தொடர்ந்து மத்திய அரசின் ஆணையும் வரும்போது இரண்டும் சேர்ந்து முழுமையாக தென்காசி தாலுகாவை தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்க இயலும். அங்கே பல வசதிகள் இருக்கின்றன. சில இடங்களை, சகாரா பாலைவனமாக இருக்கக் கூடிய இடங்களை, தொழில்துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்துவிட்டு ஒரு பலனும் இல்லாமல் இருப்பதைவிட தென்காசியில் பல வசதிகள் இருப்பதால், அது Semi urban area ஆக இருப்பதால் அதை தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவித்தால் பல வசதிகள் அங்கு ஏற்படும். எனவே மாநில அரசே முதலில் அதை தொழில்துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1986 மே 3]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு அப்படி முன்வருவதற்கு தயக்கம் கிடையாது. மாநில அரசைவிட மத்திய அரசு செய்தால் சலுகைகள் அதிகமாகக் கிடைக்கும். கொஞ்சம் பொறுத்திருந்தால் அதிகச் சலுகைகளோடு வந்தால் மாண்புமிகு உறுப்பினருக்கு அது பயன்படும்.

திரு. துரை கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தாலுகாவை தொழில்துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதேபோல் தமிழ்நாட்டில் இருக்கிற மற்றத் தாலுகாக்களையும் தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாக்களாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அறிவிக்கிற செயற்குறிப்பு அரசிடம் உள்ளது. ஆனால் அதைப்பற்றிய விவரங்களை தனிக் கேள்வி போட்டால் தருகிறேன்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகள் என மாநில அரசு மத்ய அரசு மூலம் எவ்வளவு தாலுகாக்கள் அறிவிக்கப்பட இருக்கின்றன என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அது பற்றிய குறிப்புகள் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. எஸ். என். இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தாலுகாவை தொழில்துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்கும் செயற்குறிப்பு உள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோன்று சாத்தான்குளம் தாலுகாவும் தொழில்துறையில் பின்தங்கிய தாலுகாவாக அறிவிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி முதலில் கிடைக்கட்டும். பிறகு சாத்தான் குளத்திற்குப் போகலாம்.

[1986 மே 3

திரு. க. நரசிம்மபல்லவன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக எந்தக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏ, பி, சி என்ற மூன்று பிரிவுகளாக மத்திய அரசு பின்தங்கிய பகுதிகளை அறிவிப்பதில் கவனம் செலுத்துகிறது, அனுமதி அளிக்கிறது. அந்த வகையில் தென்காசியை 'பி' பிரிவின் கீழ் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். 'பி' என்று சொன்னால் 15 சதவிகிதம் வரை சலுகை கிடைக்கும். 15 இலட்சத்திற்கு மேற்படாது உதவிகள் கிடைக்கும்.

தஞ்சை மருத்துவக் கல்லூரி முதல்வர்.

615—(*வினா எண் 1847) திரு. துரை கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய மருத்துவ மன்றம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி, மருத்துவக் கல்லூரி முதல்வர் பதவிக்கு குறைந்தது 10 ஆண்டுகளாவது ஆசிரியர்களாக (மருத்துவம் கற்பிக்கும்) பணி அனுபவம் பெற்றிருக்கவேண்டும் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், தஞ்சை மருத்துவக் கல்லூரி முதல்வர் இந்தத் தகுதியைப் பெற்றுள்ளாரா ?

(இ) இல்லையெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) : இத்தகுதி பெறாதிருந்த முன்னாள் டீனை மாற்றிவிட்டு இத்தகுதி பெற்றுள்ள ஒருவரை அக் கல்லூரி டீனாக நியமிக்கபட்டுள்ளது.